(Chapter XXIII code of Criminal procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO-II, CHENGALPATTU.**
**DEPOSITION OF WITNESS**
**CC No. 100-2018**

| | |
|---|---|
| Deposition of witness for | : **(PW**-1**)** |
| Name | : Tamizh thendral |
| Father's Name | : Azhagesan |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Dated | : 12-07-2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12-07-2022**

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

எதிரி இந்தியன் ஏர்போர்ஸ் நிறுவனத்தில் வேலை செய்கிறார் என்றும் காலையில் கிளம்பினால் மாலையில் தான் வீடு திரும்புவார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் வீடு திரும்பும் நேரம் எனக்கு தெரியாது. நான் அனுப்பிய வழக்கறிஞரின் அறிவிப்பை பற்றி எதிரிக்கு தெரியாது என்றால் சரியல்ல. எதிரியின் கவனத்திற்கு நான் அனுப்பிய வழக்கறிஞரின் அறிவிப்பு செல்லவில்லை என்றும், ஆனால் அந்த அறிவிப்பு அவருக்கு அனுப்பப்பட்டு unclaimed என திருப்பப்பட்டது எனது செல்வாக்கை பயன்படுத்தி இந்த வழக்கிற்காக ஆவணமாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. sec 138 (b) NI Act யின் படி எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பவில்லை என்றும், அவருக்கு நான் அனுப்பிய அறிவிப்பை பற்றி தெரிவிக்கவில்லை என்பது sec 138 (b) NI Act யின் படி சட்டரீதியான நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல நான் எதிரிக்கு அறிவிப்பை அனுப்பினேன். நான் இந்த வழக்கில் எதிரி எனக்கு தரவேண்டிய ரூ.5லட்சத்திற்கு நான் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் OS No.195/2018 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதனால்

இந்நீதிமன்றத்தில் எதிரியின் மீது தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது சட்டபடி தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கானது சட்டபடி நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வருமான வரி ஆண்டுதோறும் நான் தாக்கல் செய்துவரவில்லை. நான் எதிரிக்கு 3 மாத இடைவெளிக்குள்ளாக கொடுத்ததாக சொல்லபடும் ரூ.15லட்சத்தை எந்த வருமானத்தை வைத்து கொடுத்தேன் என்ற விவரத்தை குறித்து ஏதேனும் ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வங்கியில் FD ல் பணம் வைத்திருந்தேன் அதை வைத்து கொடுத்தேன். இந்த விவரத்தை குறித்து மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரி தரப்பில் 27/08/2015 தேதியிட்ட memorandum of the understanding in certified copy என்பதனை **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்டுகின்றது, அந்த எமசாஆ1 ல் அந்த ஸ்டேம்ப் பேப்பரை வாங்கியவரின் பெயர் செந்தில்நாதன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனது பெயரில் வாங்கி வர சொன்னேன் ஆனால் செந்தில்நாதன் அவரின் பெயரை குறிப்பிட்டு இந்த ஸ்டேம்ப் பேப்பரை வாங்கி வந்துள்ளார். இந்த ஆவணமானது வழக்கிற்காக போலியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியின் கையொப்பமும் எமசாஆ1ல் காணப்பட்டுள்ள எதிரியின் கையொப்பமும் ஒன்றுக்கொன்று மாறுபாடாக உள்ளது என்றால் சரியல்ல எதிரி தான் கையொப்பமிட்டார். எதிரியின் மனைவி ஆங்கிலத்தில் தான் கையொப்பம் இடுவார் என்றால் அவர் எப்படி கையொப்பம் இடுவார் என்று எனக்கு தெரியாது அந்த ஆவணத்தில் அவர் தான் கையொப்பம் செய்தார். இந்த வழக்கில் எதிரி மற்றும் அவர் மனைவி கையொப்பமிட்ட ஆவணமான மசாஆ4 மற்றும் எமசாஆ1ல் உள்ள கையொப்பங்கள் வேறுபட்டுள்ளது என்றால் சரியல்ல, இந்த ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆகையால் தான் தற்போது குறியீடு செய்யப்பட்டுள்ள எமசாஆ1 எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மனுதாரால்தாக்கல் செய்த வழக்கின் certified copy **எமசாஆ2** ஆக குறியீடு செய்யபடுகின்றது அந்த ஆவணத்தில் பத்தி 4 ல் நான் எதிரிக்கு கொடுத்த ரூ.5லட்சத்திறகு அவர் என்னிடம் கொடுத்த ரூ.5லட்சத்திற்கான காசோலைக்கு, நான்

அவருக்கு 05/03/2018 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றை கொடுத்துள்ளேன் என்றும், அந்த அறிவிப்பானது unclaimed என்று திருப்பட்டுள்ளது என்றும், அந்த திருப்பப்ட்ட பதிவு தபாலை நீதிமனற்த்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், அவ்வாறு அந்த ஆவணம் இந்நீதிமன்றத்தில் இல்லை என்றால் சரியல்ல. எதிரி எந்த தேதியில் என்னிடம் காசோலையினை கொடுத்தார் என்றால் 27/08/2015 ல் கொடுத்தார். எதிரி என்னிடம் அவருக்கு கடன் இருப்பதாகவும் அவரின் மகளின் கல்யாண செலவுக்கும், இருசக்கர லோன் இருப்பதற்கும், அவரின் மாமனாரின் மருத்துவ செலவிற்கும் என்னிடம் பணம் கேட்டார். இந்த விவரத்தினை நான் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4ல் எதிரி எனக்கு எவ்வளவு ரூபாய்கான காசோலையை கொடுத்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். எதிரி என்னிடம் காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5ல் எதிரியானவர் கடந்த டிசம்பர் 2017வாக்கில் என்னிடம் உத்திரவாதமாக கொடுத்த மேற்படி காசோலையை ரூ.5லட்சத்திற்கு வரைந்து வங்கியில் செலுத்தி பெற்றுக் கொள்ளுமாறும், அதேபோல் மீதி அசல் மற்றும் வட்டி தொகையை அடுத்த 3 மாததகிற்குள் செலுத்திவிடுவதாக் கூறியுள்ளார் என்றும், மேற்படி எந்த இடத்தில் எந்த தேதியில் மேற்சொன்ன வார்த்தைகளை கூறினார் என்பதனை குறிப்பிடடு சொல்லவில்லை என்றால் சரிதான். 2015ல் கொடுக்கப்பட்ட காசோலையை நான் 2018ல் தான் வங்கியில் தாக்கல் செய்தேன் என்றால் 2015ல் என்னிடம் எழுதபடாத காசசோலையை என்னிடடிம் கொடுத்தார் 2017ல் காசோலை தொகை மற்றும் கையொப்பம் இட்டு என்னிடம் கொடுத்தார் நான் வங்கியில் செலுத்தினேன். பிரமாண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகள் உண்மையில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மசாஆ1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி என்னுடைய வீட்டிற்கு அருகாமையில் வசிப்பதால் அவரின் கவனம் இல்லாமல் அவருடைய வீட்டிலிருந்து எதிரியின் காசோலையை

எடுத்து வந்து விட்டேன் என்றால் சரியல்ல. நான் நிறைய நபர்களுக்கு கந்துவட்டி மற்றும் மீட்டர் வட்டிக்கு பணத்தை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி நான் அதிக வட்டிக்கு பணம் கொடுப்பதினால் அவர் என்னை தரகுறைவாக பேசிய முன் விரோதம் காரணமாக அவர் மீது இந்த வழக்கினை தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. தனி நபர் வருமானம் ரூ3லட்சத்திற்கு மேல் இருந்தால் கட்டாயம் வருமான வரி தாக்கல் செய்யவேண்டும் என்றும், அவ்வாறு ரூ.15லட்சத்தை எதிரிக்கு கொடுத்திருந்தால் வருமான வரி தாக்கல் செய்திருப்பனே் என்றால் நான் வருமான வரி தாக்கல் செய்துள்ளேன். பண பரிவர்த்தனை ரூ.20,000 மேலாக காசோலை மூலமாக தான் கொடுக்கபட வேண்டும் என்றும், அவ்வாறு ரூ.15லட்த்தை ரொக்கமாக எதிரிக்கு கொடுத்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கானது சட்டபடி கொடுக்கப்பட்ட கடனுக்காக வழங்கப்பட்ட காசோலை அல்ல என்றால் சரியல்ல.